DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.193/2018**

Deposition of :PW - 5

| | | |
|---|---|---|
| Name | : திரு.பழனிசாமி | Caste: |
| Father's Name | : திரு. சுப்ரமணி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றவாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of March -2023.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் வாழப்பாடி தாலுக்கா மண்ணாய்க்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். இறந்து போன முருகேசன் எனது பங்காளி. ஆஜர் எதிரியை தெரியும். அவர் முருகேசனின் மனைவி. இன்றிலிருந்து சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் முருகேசன் இறந்துவிட்டார். இரவு 12.00 மணியிருக்கும். எனது பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் போலீசார் விசாரணைக்கு அழைத்ததாக என்னை கூப்பிட்டார்கள். நான் சென்று பார்த்த போது முருகேசனின் சவத்தை அவர் வீட்டருகே நின்று கொண்டிருந்த ஆம்புலன்சில் வைத்திருந்தார்கள். போலீசார் என்னை என்ன நடந்தது என்று கேட்டார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்றும் நீங்கள் அழைத்ததால்தான் வந்தேன் என்றும் சொன்னேன். அவர்கள் என்னை விசாரித்ததற்காக என்னிடம் இருந்து ஒரு கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். முருகேசனின் சவத்தை பிரேத பரிசோதனைக்காக வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் அங்கு போகவில்லை. வீட்டிலேயே இருந்து விட்டேன். முருகேசன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. முருகேசனுக்கு குடிப்பழக்கம்

உண்டு. அதனால் அடிக்கடி அவருக்கும் ஆஜர் எதிரிக்கும் சண்டை வரும். முருகேசன் இறந்ததற்கு முதல் நாளும் அது போன்று அவர்கள் இருவரும் சண்டையிட்டு கொண்டார்கள்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

25.06.2017 அன்ற காலை 08.30 மணியளவில் முருகேசன் அவரது வீட்டில் கழுத்தில் காயங்களுடன் கொலை செய்யப்பட்டு இறந்து கிடப்பதாக தகவல் தெரிந்து நான் அவரது வீட்டிற்கு சென்று பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். முருகேசன் இறந்ததற்கு முதல் நாள் அவர் குடித்துவிட்டு வந்து வீட்டில் எதிரியிடம் சண்டை போட்டு வீட்டிலிருந்த பொருட்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

அதனால் ஆஜர் எதிரி குடிபோதையில் வீட்டில் படுத்திருந்த முருகேசனை துப்பட்டாவால் கழுத்தை இறுக்கி கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அதன் பின்னர் எதிரி அவரது குழந்தைகளை அழைத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டதாக தெரிய வந்தது என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அந்த கொலை சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவார் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை பிரேத விசாரணை சாட்சியாக விசாரித்தாக போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான். போலீசார் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால்தான் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால்

சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் தவறான வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

Sd/- **G. Sri Rama Jeyam)**
III Additional District Judge,
Salem.